# மெட்ரோ ரயில் பாதை திட்டம் ஒப்பந்ததாரர்களுக்கு அழைப்பு



– நமது நிருபர் –

மெட்ரோ ரயில் இரண்டாவது திட்டத்தில், மாதவரம் – சோழிங்கநல்லூர் மெட்ரோ பாதையில், தரைக்கு மேல், 11.6 கி.மீ., மெட்ரோ பாதை அமைக்க, உலக அளவில், ஒப்பந்ததாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## மூன்று வழித்தடங்கள்

சென்னை மெட்ரோ ரயில், இரண்டாவது திட்டத்தில், 69 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், மூன்று வழித்தடங்களில், மாதவரம் – சிறுசேரி சிப்காட் இடையே, 45.8 கி.மீ., கலங்கரை விளக்கம் பூந்தமல்லி பை – பாஸ் இடையே, 26.1 கி.மீ., மாதவரம் – சோழிங்கநல்லூர் இடையே, 47 கி.மீ., என, 118.9 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தில் முதற்கட்டமாக, மாதவரம் பால்பண்ணை – சிறுசேரி சிப்காட் வரையான பாதையில், மாதவரம் – தரமணி இணைப்பு சாலை இடையே, 30 இடங்களில் மெட்ரோ நிலையங்கள் கட்டப்பட உள்ளன.

நிலையங்கள் கட்டுவதற்கு ஏதுவாக, பூமியில் பள்ளம் தோண்டி, பாதுகாப்பு தடுப்புச்சுவர் கட்டும் பணி துவங்க திட்டமிடப்பட்டு, உலக அளவில் ஒப்பந்ததாரர்களுக்கு சமீபத்தில், அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## அழைப்பு

இத்துடன், மாதவரம் பால்பண்ணை – சோழிங்கநல்லூர் இடையே, 47 கி.மீ., மெட்ரோ பாதையில் குறிப்பிட்ட பகுதி, கட்டுமான பணிக்கான ஆரம்பக்கட்ட பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

இப்பாதையில், மடிப்பாக்கம், கீழ்க்கட்டளை, ஈச்சங்காடு, கோவிலம்பாக்கம், வெள்ளக்கல், மேடவாக்கம் கூட்டுரோடு, காமராஜ் கார்டன் சாலை, மேடவாக்கம் ஜங்ஷன், பெரும்பாக்கம், குளோபல் மருத்துவமனை மற்றும் எல்காட் மருத்துவமனை இடையே, 11.6 கி.மீ., தரைக்கு மேல் தூண்கள் அமைக்கப்பட உள்ளன.

தூண்கள் மீது பாலம் அமைத்து, ரயில் பாதை அமைக்கவும், 11 நிலையங்கள் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டு, ஆரம்பக்கட்ட பணிகள் துவங்கியுள்ளன.

உலக அளவில், ஒப்பந்ததாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.